**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 288/2025**

**Prosecution witness : அ.சா.6** **Date : 16.03.2026.**

| | |
|---|---|
| **Name : மாதுராஜ்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 2025 ம் வருடம் ஜலகண்டாபுரம் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 03.03.2025 ம் தேதியன்று சுப்பிரமணி, த/பெ.சவுண்டப்ப செட்டியார் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய சி.எஸ்.ஆர்.எண்.73/2025 என்ற எண்ணில் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு அதன் அடிப்படையில் கடந்த 12.03.2025 ம் தேதியன்று மாலை 4 மணிக்கு **நி.கு.எண்.67/2025 u/Sec. 306 BNS** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

2. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 12.03.2025 ம் தேதி மாலை 5 மணிக்கு சம்பவ இடம் நஞ்சப்பசெட்டி தெரு, வாதியின் வீட்டில் சென்று சாட்சிகள் செல்வம் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். வரைபடம் **அ.சா.ஆ 10** ஆகும்.

3. பின்பு சாட்சிகள் சுப்பிரமணி, ராதாமணி, கீர்த்தனா, சவுண்டப்பன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 22.03.2025 ம் தேதி சந்தேக எதிரி வசந்தி என்பவரின் வீட்டிற்கு சென்று அவரை விசாரணை

செய்த போது முன்னுக்குப்பின் முரணாக சொன்னதன் அடிப்படையில் அவர் தானாக ஒப்புக் கொண்டு சுப்பிரமணி என்பவரின் வீட்டில் திருடியதை ஒப்புக் கொண்டார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அசா.ஆ.11** ஆகும். பிறகு 14.15 மணிக்கு சாட்சிகள் செல்வம், ராமகிருஷ்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் எதிரி தன் வீட்டிலிருந்து ஆஜர் செய்த 5 கிராம் மீன் போட்ட மோதிரம் – 1, 2 கிராம் தோடு, 1 சிமிக்கி – 1, சில்வர் பிரேஸ்லெட்–1, இரண்டு வளையளுக்கு பதிலாக 1 கிராம் வேல் போட்ட டாலர் ஒன்று, 1 பவுன் கழுத்து செயின் ஒன்று, 4 கிராம் எடையுள்ள மோதிரம் – 1 மற்றும் AVR நகை கடையின் பில் ஒன்று ஆகியவைகளை எதிரி ஆஜர் செய்தார். அவ்வாறு கைப்பற்றப்பட்ட பொருட்கள் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக கடந்த 22.03.2025 ம் தேதி மாலை 15.30 மணிக்கு கைப்பற்றி சாட்சிகள் செல்வம் மற்றும் ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டு படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். கடந்த 22.03.2025 ம் தேதி மாலை 18.30 மணிக்கு தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ. 12** ஆகும். மேற்சொன்ன பொருட்கள் படிவம் 95 வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. படிவம் 95 **அ.சா.ஆ–13** ஆகும்.

5) பிறகு 18.30 மணிக்கு தாரமங்கலத்தில் நகை விற்பனை செய்ததை அழைத்து சென்றால் அங்கு அடையாளம் காட்டுவேன் என்று சொன்ன பிறகு தாரமங்கலம் AVR நகை கடைக்கு சென்று கடையில் விசாரணை செய்த போது கடையிலிருந்து இரு வளையல்களுக்கு பதிலாக உருக்கியதால் அவற்றிற்கு 15.740 கிராம் நகையானது ஆஜர் செய்தார். ஆஜர் செய்ததை லட்சுமண குமார், அருண்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் 18.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. பிறகு எதிரியை சம்பவயிடம் சென்று காட்டுவதாக கூறியதால் சம்பவயிடம் வரப்பெற்றது. பிறகு 22.30 மணிக்கு நிலையம் முன்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வாறு உருக்கப்பட்ட தங்க நகை கட்டி கைப்பற்றிய போது தயார் செய்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ–14**

ஆகும். படிவம் 95 **அ.சா.ஆ.15** ஆகும். சுப்பிரமணி, ராதாமணி, கீர்த்தனா ஆகியோர்களை மறு விசாரணை செய்தேன்.

4. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரி மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 23.03.2025ம் தேதி **நி.கு.எண்.67/2025 u/Sec. 306 BNS** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>.**

5. எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் 02.03.2025ம் தேதி இரவு புகார் அளிக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை 12.03.2025ம் தேதி பதியப்பட்டது. காவல் நிலையம் வந்து தான் புகார்கொடுத்தனர் என்றால் ஆமாம். புகாரை யார் எழுதினார்கள் என்று தெரியாது என்றால் ஆமாம். முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன். பின்னர் சம்பவயிடமான வாதியின் வீட்டிற்கு சென்றேன்.

6. 2 நாட்கள் கால தாமதமாக புகார் அளிக்கப்பட்டது என்றால் ஆமாம். சம்பவயிடத்தில் கேமரா இருந்ததா என்றால் கேமரா எதுவும் இல்லை. 22.03.205–ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு அவர் வீட்டிற்கு சென்று விசாரணை செய்தோம். நான் மற்றும் முதல் நிலை காவலர் 174 புவனேஷ்வரி மற்றும் அங்கு அருகாமையில் உள்ள செல்வம் இராமகிருஷ்ணன் முன்னிலையில் விசாரணை செய்தோம் என்றால் ஆமாம்.

7. தெரு முனையில் நின்று கொண்டிருந்தாரகள் என்றால் ஆமாம். நான் சென்ற பின்னர் வந்தார்களா என்றால் நான் செல்வதற்கு முன்பாகவே இருந்தார்கள். நான் வீட்டிற்குள் அவர்களை அழைத்து சென்றானா என்றால் ஆமாம். எதிரிக்கு விசாரணைக்கு சம்மன் வழங்கினேனா என்றால் இல்லை. வேறு யாரும் இல்லை. காவல் நிலையம் அழைத்து செல்லவில்லை என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் வீட்டி முன்பாக வைத்து பதிவு செய்யப்பட்டது. நிறைய வீடுகள் உள்ளது என்றால் ஆமாம்.

8. எவ்வளவு பேர்கள் இருந்தாரகள் என்றால் இரண்டு பேர் இருந்தனர். அவர்கள் எதற்கு வீட்டு முன்பாக இருந்தனர் என்றால் அதை பற்றி நான் விசாரிக்க

வில்லை. யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் நானே தட்டாச்சு செய்தேன். அதை பற்றி சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பீரோவிலிருந்து நகைகளை எடுத்து ஆஜர் செய்தார்கள். எந்த பீரோ என்றால் இரும்பு பீரோ. அதன் பிறகு, தாரமங்கலம் ஏ.வீ.ஆர் நகை கடைக்கு அழைத்து சென்றார். அங்கு விற்பனை செய்ததை அடையாளம் காட்டுவதாக கூறியதால் தாரமங்கலம் அழைத்து சென்றேன். அங்கு AVR நகை கடையில் லட்சுமணகுமார், அருண்குமார் ஆகியோர் முன்னிலையில் அங்கு ஆஜர் செய்த நகைகளை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. அவர்களை சாட்சியாக விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். லட்சுமணகுமார், அருண்குமார் ஆகியோரை சாட்சியாக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான்.

9. வளையலை உருக்கிய நபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் ஆமாம். குமாரவிலாஸ் நகை கடை, தாரமங்கலத்திற்கு சென்றேன் என்றால் ஆமாம். அங்கு ஞானபிரவின் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றேன். அங்கு சிசிடிவி பதிவு இருந்தது. அந்த பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். உருக்கிய நகைக்கான பில் கொடுத்தார்களா என்றால் கொடுத்துள்ளார்கள்.

10) எதிரி நகையை விற்கும் போது அதற்குண்டான பில் எதுவும் கொடுக்கவில்லை. நகை கடையில் பில் இல்லாமல் நகை விற்பது தவறு என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கு வந்து சம்பவம் நடந்ததை பற்றி தெரிவித்தார். வளையல் தான் உருக்கப்பட்டது என்பதற்கு என்ன ஆதாரம் என்றால் சிசிடிவி கேமராவில் பதிவாகியுள்ளது. சிசிடிவி பதிவுகளை தடய அறிவியல் ஆய்வுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை.

11) அ.சா.1 க்கு நகை பாத்தியம் என்பதை காட்டுவதற்கு ரசீது கைப்பற்றினேனா என்றால் இல்லை. அ.சா.1 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் ஆமாம். இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் அனைவரும் அ.சா. 1 க்கு உறவினரா என்றால் தெரியாது. சரியான ஆதாரம் தாக்கல் செய்யாமல் வேலைக்கு வந்தார் என்பதால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார் என்றும் எதிரி நகையை

எடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வேறு யாரோ எடுத்ததை எதிரி மீது தவறுதலாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.17 11:24:40 +0530

Judicial Magistrate No.II,
Mettur.